1972 டிசம்பர் 7]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இதைப்பற்றி நம்முடைய மாநில அரசு மத்திய சர்க்காரை வற்புறுத்தி வருவது அனைவரும் அறிந்ததே.

திரு. ஏ. எம். இராஜா : டெலிவிஷன் செட் செய்வதற்குக் கூட்டுத் துறையிலே அரசு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த டெலிவிஷன் செட்களுக்குத் தேவையான உபகரணங்களைச் செய்வதற்கு ஆன்ஸிலியரி இண்டஸ்டிரீஸ் சம்பந்தமாக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா, தனிப்பட்டவர்கள் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறு தொழில்கள் என்ற முறையில் இதைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள் கிட்டதட்ட சுமார் 7 பேர்களுக்கு மேல். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறோம்.

திரு. சொ. காவேரிமணியம் : கூட்டுத்துறையில் ஏற்படும் தொழிற்சாலை பிற்பட்ட பகுதிகளில் அமைய ஏற்பாடு செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பிற்பட்ட பகுதிகளில் தொழில்களை ஆரம்பிக்கின்ற பலமுயற்சிகள் ஏற்கனவே தொழில் துறையிலே எடுக்கப்பட்டு வருகிறது.

Price for molasses.

*73 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the basis on which the price for molasses is fixed?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1961-ஆம் ஆண்டு மொலாஸிஸ் கட்டுப்பாட்டு உத்திரவின் கீழ் கரும்புக் கசண்டின் (மொலாஸிஸ்) விலையை மத்திய அரசு நிர்ணயிக்கிறது.

பாலங்கள்.

*74 வினு.— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றின் குறுக்கே எலமனூருக்கும் வாய்த்தலைக்கும் இடையே சிறிய பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?